சுற்றறிக்கை இல. 2010/03

எனது இல. எவ்ஈ/211/2010
தேர்தல்கள் ஆணையாளரின் அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
09.04.2010

மத்திய வங்கியின் ஆளுநர்,
அமைச்சுக்களின் செயலாளர்கள்/ பிரதமச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபன,
நியதிச் சட்ட சபைகளின் தவிசாளர்களுக்கு,

## பாராளுமன்றத் தேர்தல் - 08.04.2010

## தேர்தல் பணியாட்களுக்கான கொடுப்பனவுகள்

2010.04.08 ஆந் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலின்போது தேர்தல்கள் ஆணையாளரின் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவுறுத்தலுக்கிணங்க தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பணியாட்களுக்கு வழங்கப்பட முடியுமான கொடுப்பனவுத் தொகைகள், அக்கொடுப்பனவுகளோடு தொடர்புடைய கணக்குக் குறிப்பேட்டு நடைமுறைகள் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

02. தேர்தல் பணியாட்களுக்குக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன்னர் இச்சுற்றறிக்கையை இதனோடு தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகள், தாபனக் கோவையின் ஏற்பாடுகள் என்பவற்றை நன்றாக வாசித்துப் பார்க்குமாறு தங்களது கணக்குப் பிரிவினருக்கு அறிவுறுத்தல் வழங்குதல் வேண்டும். இச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளை மீள்நிரப்புவதற்கு நிதி வழங்கப்பட மாட்டாது. ஆதலால் தேர்தல் பணியாட்களுக்கான கொடுப்பனவுகள் இச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதோடு, இவ்வறிவுறுத்தல்களுக்கு முரணாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்கான பொறுப்பை கொடுப்பனவை மேற்கொண்ட அலுவலரே பொறுப்பேற்க வேண்டிவரும்.

### 03. நிரந்தர அலுவலகங்களில் கொடுப்பனவு செய்ய முடியுமான பணிகள்.

மேற்குறித்த வாக்கெடுப்பின்போது கீழ்வரும் விசேட பணிகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பிரயாணச் செலவுகள், படிகள் என்பவற்றை தமது நிரந்தர அலுவலகங்களினூடாகக் மேற்கொள்ள முடியும். அவ்விபரங்களை இங்குள்ள 11.1 - 11.2 ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு எனக்கு அறிவித்ததன் பின்னர் கொடுப்பனவுக்குரிய நிதி என்னால் மீள்நிரப்பல் செய்யப்படும்.

i வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாகவோ வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்தில் நிறுவப்பட்ட இணைப்பு அலுவலகங்களின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலராகவோ பணியாற்றியமை. (மாவட்டச் செயலகங்களில் அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் நிறுவப்படும் பொது வசதிகள், நலன்புரி மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்கும் இணைப்பு அலுவலகங்களின் அலுவலர்கள் இவ்வகுதியில் அடங்க மாட்டார்கள்)

ii வாக்கெடுப்பு நிலையமொன்றில் அல்லது வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்தில் நிறுவப்பட்ட விசேட இணைப்பு அலுவலகங்களில் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலராக, கனிட்ட தலைமைதாங்கும் அலுவலராக, எழுதுநராக அல்லது கனிட்ட ஊழியராகப் பணியாற்றியமை.

iii வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய நாள் வாக்குப் பெட்டிகளை விநியோகிக்கும் நிலையமொன்றில் வாக்குச்சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் ஆகியவைகளை விநியோகிக்கும் அல்லது கையேற்கும் பணிகளில் ஈடுபட்டமை.

iv வாக்கெண்ணல் நிலையங்களில் வாக்கெண்ணல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.

மேற்குறித்த பணிகளுக்கும்கூட, குறித்த பணிக்காக வழங்கப்பட்ட நியமனக் கடிதம் ஒன்றின் மூலம் அலுவலர் முறையாக நியமனஞ் செய்யப்பட்டும், அப்பணியை மேற்கொண்டார் என உறுதிப்படுத்துகின்ற வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்பட்டுமிருந்தால் மாத்திரமே கொடுப்பனவு செய்ய முடியும்.

## 04. பணியாற்றிய தேர்தல் அலுவலகங்களிலிருந்து மாத்திரம் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பணிகள்.

கீழ்வரும் பணிகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் அவர்கள் பணியாற்றிய தேர்தல்கள் அலுவலகத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். இப்பணியாட்களின் நிரந்தர அலுவலகங்களினூடாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு மீள்நிரப்புச் செய்யப்படுவதற்காக என்னிடமோ அல்லது பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களிடமோ சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள் நிராகரிக்கப்படுமென்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். இப்பணிகளில் ஈடுபட்ட அலுவலர்கள் அதற்கான வவுச்சர்களை சமர்ப்பித்ததன் பின்னர், உரிய தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடந்து கொண்டு விரைவில் அந்த வவுச்சர்களையும் உரிய ஆவணங்களையும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(அ) பயிற்சி வகுப்புக்களிலும் அறிவுறுத்தல் கூட்டங்களிலும் கலந்துகொள்ளல்.

(ஆ) நியமனக் கடிதங்கள்/ எழுத்துக் கோப்புக்கள் என்பவற்றைக் கையேற்பதற்காக முந்திய தினமொன்றில் சமுகமளித்தமை.

(இ) தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவுறுத்தலுக்கமைய பூர்வாங்கப் பணிகளில் ஈடுபட்டமை.

(ஈ) நலன்புரி/ சுகாதார, சுகநல/ போக்குவரத்து/ வாக்கெண்ணல் நிலையங்களைத் தயார்படுத்தல்/ பொது வசதிகள்/ இணைப்புப் பணிகள் ஆகிய பணிக்குழுக்களில் பணியாற்றியமை.

(உ) பிரதேச செயலகங்களிலும் ஏனைய அலுவலகங்களிலும் அலுவலர் குழாங்களின் நடவடிக்கைகள்.

(ஊ) கடமை எதிர்பார்ப்போடு காத்திருத்தல். (Reserve)

(எ) கொத்தணி வாக்கெடுப்பு நிலையங்களில் விசேட அலுவல்களில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகள்.

(ஏ) தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களினால் அல்லது தேர்தல்கள் அலுவலகங்களினால் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுகள்.

(ஒ) மேற்குறித்த 03 ஆம் பிரிவில் குறிப்பாக குறித்துக் காட்டப்படாத வேறேதேனும் பணிகள்.

## 05. பிரயாணச் செலவுகள்.

குறித்த பணிகளுக்கான நியமனக் கடிதம் ஒன்றினாலும் அப்பணியில் ஈடுபட்டதற்கான வரவுச் சான்றிதழ் ஒன்றினாலும் நிரூபிக்கப்படுமாயின், மேற்குறித்த **03** ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் கடமைகளுக்காக கீழ்வரும் மாற்றங்களுக்கு உட்பட்டவகையில் தாபனக் கோவையின் xiv ஆம் அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ள பிரயாணச் செலவுகளை பெற்றுக்கொள்ள அலுவலர்களுக்கு உரித்துண்டு.

5.1 உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவராக, சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவராக, கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவராக, வாக்கெடுப்பு நிலைய எழுதுநர் ஒருவராக அல்லது கனிட்ட ஊழியரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஓர் அலுவலர் மேற்குறித்த பணிக்குச் சேல்கின்றபோது பிரயாணத்தை ஆரம்பித்த இடமாகக் கருதப்பட வேண்டியது அவ்வலுவலரின் கடமை நிலையமாகும். சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவர் அழைத்துச் செல்கின்ற அரசாங்க ஊழியர் அல்லாத கனிட்ட ஊழியர் ஒருவரின் கற்பனை அலுவலகமாக கருதப்பட வேண்டியதும் அச்சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் கடமை நிலையமேயாகும்.

5.2 அலுவலர் குறித்த பயணத்துக்காக தாம் வதிகின்ற வீட்டிலிருந்து பிரயாணத்தை ஆரம்பித்திருந்தும் அவ்வீடு அவரது கடமை நிலையத்திலிருந்து 15 மைல்களுக்குள் (கிலோமீற்றர் 24) அமையப் பெற்றுமிருப்பின், அவர் அவ்வீட்டிலிருந்து பயணத்தை ஆரம்பித்ததாகக் கருத முடியும். அதேபோன்று அவர் பிரயாணத்தை ஆரம்பிக்கும் வீடு அவரது கடமை நிலையத்திலிருந்து 15 மைல்களுக்குக் கூடிய (கிலோமீற்றர் 24) தூரத்தில் அமையப்பெற்றிருப்பின் 15 மைல்களுக்குகள் (கிலோமீற்றர் 24) அமைந்துள்ள கற்பனை இடமொன்றிலிருந்து பிரயாணம் ஆரம்பிக்கப்பட்டதாக கருதப்படுவதற்கு இடமளிக்கலாம்.

5.3 நேரகாலத்துடன் சேவையைப் பொறுப்பேற்க வருகை தரவேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிவுறுத்தப்பட்டுள்ள அலுவலர்களுக்கு தற்காலிக தங்குமிடங்களுக்கான வசதிகள் தெரிவத்தாட்சி அலுவலரினால் வழங்கப்படும். அவ்விடங்களில் தங்காமல் வேறிடங்களில் தங்கியமைக்காக அலுவலர்களுக்கு அதிகூடியது 04 மைல்களுக்கு (கிலோமீற்றர் 7) மாத்திரமே பிரயாணப்படிகளை வழங்க முடியும்.

5.4 வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பு கடமைகளில் ஈடுபடவிருக்கும் ஓர் அலுவலர் வாக்கெடுப்புக்கு முந்திய நாள் இரவை தமக்குரிய வாக்கெடுப்பு நிலையத்திலோ அல்லது தெரிவத்தாட்சி அலுவலரினால் நிர்ணயிக்கப்பட்ட ஓர் இடத்திலோ கழிக்குமாறு அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்று உண்மையிலேயே அவ்விடத்தில் இரவைக் கழித்துமிருந்தால், பிரயாணம் செய்த தூரம் 04 மைல்களுக்குக் குறைவாக இருப்பினும் (கிலோமீற்றர் 7) தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத் தொகையின் அளவுக்கு கூட்டு அலவன்சுகளை வழங்கலாம்.

5.5 வாக்கெடுப்புத் தின இரவு வாக்கெண்ணல் பணிகளுக்காக வாக்கெண்ணல் நிலையமொன்றில் தங்கியிருந்த அலுவலர்களுக்கும் பிரயாணம் செய்த தூரத்தின் அளவைக் கருத்தில் கொள்ளாமல் அத்தினத்திற்கு மாத்திரம் கூட்டு அலவன்ஸ் வழங்க முடியும்.

5.6 ஆயினும் வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய நாள் வாக்குப் பெட்டிகளை விநியோகிக்கும் கடமைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு அப்பணியினை நிறைவு செய்து வீட்டிற்குச் செல்வதற்கு கால நேரம் போதுமாகவுள்ளதால் அத்தினம் கடமையிலீடுபட்ட அவ்வலுவலர்களுக்கு, அப்பணிகளில் ஈடுபட்ட இடம் அவர்களின் நிரந்தர அலுவலகம் அமைந்துள்ள மாநகர எல்லைக்கு வெளியே அமையப்பெற்றும், அவ்வாறு கடமையில் ஈடுபட்ட நிலையம் தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தூரத்தில் அமையப்பெற்றுமிருந்து, உண்மையிலேயே தமது வதிவிடத்திற்கு வெளியே தங்கியிருக்க வேண்டியதற்கான கடமைத் தேவைப்பாடும் காணப்பட்டுமிருந்தால் மாத்திரமே கூட்டு அலவன்சை வழங்க முடியும்.

5.7 தேர்தல்கள் ஆணையாளரினாலோ அல்லது தெரிவத்தாட்சி அலுவலரினாலோ நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதிகள், நேரங்களில் அலுவலர்கள் கடமைக்காகப் பயணித்தல் வேண்டும். கூட்டு அலவன்சு முழுமையாக இந்த அடிப்படையிலேயே வழங்கப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட திகதிகள், நேரங்களுக்குட்படாத கொடுப்பனவுகள் எவ்விதத்திலும் மீள்நிரப்பல் செய்யப்பட மாட்டாது.

## 06. **மைல் கட்டணம்.**

6.1 I. தெரிவத்தாட்சி அலுவலரின்/ போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள குறிப்பான ஒரு பதவிநிலை அலுவலரின் முன் அனுமதியுடன் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் ஒருவர் தமது வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்வதற்காகவும் வாக்கெடுப்பின் பின்னர் மீண்டும் எடுத்து வருவதற்காகவும் **தம்மால் எடுத்துவரப்படுகின்ற வாகனமொன்றை ஈடுபடுத்தியிருந்தால்** 6.5 ஆம் பந்தியில் என்னால் வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க கிலோமீற்றரொன்றுக்கு 15/= ரூபா வீதமான மைல் கட்டணங்களை அவ்வாகனத்திற்கு வழங்க முடியும்.

II. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரினால் எடுத்துவரப்படும் வாகனத்தை செலுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்ட தனியார் சாரதிக்கு (அரசாங்க சேவையிலில்லாத) ஒரு நாளைக்கான வேதனம் ரூபா 350/= வீதமும் (12 மணித்தியால சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பின்) ஒரு நாளைக்கு ரூபா. 350/= வீதம் கூட்டு அலவன்சும் வழங்க முடியும். அந்த வவுச்சர்களை அவர் அப்பணியினை மேற்கொண்ட மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக சொந்த வாகனத்தைப் பயன்படுத்துவதற்காக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழை வவுச்சர்ரோடு இணைத்து சமர்ப்பித்தல் இன்றியமையாததாகும்.

III. அவ்வாறு எடுத்துவரப்படும் வாகனமொன்று கடமையில் ஈடுபடுத்தப்படுமாயின் மாத்திரம் அலுவலரின் பிரயாணப்படி விண்ணப்பம், (வாக்கெடுப்பு நிலைய கடமைகள், வாக்கெண்ணல் கடமைகள் என்பவற்றிற்கு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர்களையும், கனிட்ட ஊழியர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரின் எழுத்துமூல அறிவுறுத்தல்களுக்கிணங்க ஏதேனுமொரு விசேட தேவைக்காக கனிட்ட ஊழியர்கள் இருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் அவருக்கு/ அவர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்களையும், உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டமையை நிரூபிப்பதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வரவுச் சான்றிதழ்களையும்) தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

IV. <u>அவ்வலுவலர்களுக்கு அவர்களது நிரந்தர அலுவலகங்களில் மேற்குறித்த கொடுப்பனவுகளை மேற்கொண்டுவிட்டு மீள்நிரப்புக்காக சமர்ப்பிக்கக் கூடாது.</u> சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் வாகனமொன்றை எடுத்துவராவிட்டால் மாத்திரம் இக்கொடுப்பனவுகளை அவரது நிரந்தர அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டு மீள்நிரப்பலுக்காக சமர்ப்பிக்க முடியும்.

V. வாக்கெடுப்பு நிலைய கடமைகளுக்காகவின்றி வேறு அலுவல்களுக்காக சமுகமளிக்கும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு வாகனங்களை எடுத்துவருவதற்காக மைல்கூலிகள் வழங்கப்பட மாட்டாது.

6.2 தெரிவத்தாட்சி அலுவலரின்/ போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள குறிப்பான ஒரு பதவிநிலை அலுவலரின் முன் அனுமதியுடன் வலயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவர் தமது வாக்கெடுப்பு நிலையப் பணிகளுக்காக தமது <u>தனிப்பட்ட வாகனத்தையோ அல்லது துணைவரின்/ துணைவியின் வாகனத்தையோ</u> ஈடுபடுத்தி, தெரிவத்தாட்சி அலுவலர் வழங்கிய சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்பட்டுமிருந்தால், அவருக்கு தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத் தொகைக்கு ஏற்ப அதாவது ஒரு மைலுக்கு 10/= ரூபா வீதம் (கிலோமீற்றருக்கு ரூபா 6.25 என்ற வீதம்) மைல் கூலியை வழங்கலாம்.

6.3 6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளுக்கு தமது தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்தியமைக்காக, வேதனத்திற்கேற்க மைல்கட்டணம் பெற உரித்துள்ள அலுவலர்களுக்கு மாத்திரமே கொடுப்பனவுகள் வழங்க முடியுமென்பதோடு, அது தாபனக் கோவையின் xiv ஆம் அத்தியாயத்தின் அனைத்து விதிமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும். அவ்வலுவலர்களுள் தலைமை வாக்கெண்ணல் அலுவலர் மற்றும் வாக்கெண்ணல் கடமைகளுக்காக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோருக்கு மாத்திரம் அவர்களின் வாகனத்திற்காக சாரதியொருவரை கூட்டிச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த சாரதிக்கு 6.1(ii) இன்படி கொடுப்பனவுகளை செலுத்த முடியும்.

6.4 ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் குழாத்திலுள்ள வாகனங்களுக்கும் எரிபொருள் செலவுகளை மீள்நிரப்புவதற்காக என்னால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்துரை-களுக்கிணங்க உரிய படிவங்களின் மூலம் எரிபொருள் செலவை தேர்தல்கள் திணைகளத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து மீள்நிரப்பல் செய்துகொள்ள முடியும்.

6.5 போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பான கொடுப்பனவுகளுக்காக 2010.04.02 ஆந் திகதிய PE/24/2010 ஆம் இலக்க, TR-02-17 ஆம் இலக்க சுற்றறிக்கைகளிலுள்ள அறிவுறுத்துரைகளுக்கிணங்க செயற்பட வேண்டும். அந்த அறிவுறுத்துரைகளுக்கு முரணாக செயற்பட்டிருந்தால் அதுதொடர்பான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் எனது ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 07. **கனிட்ட ஊழியர்கள்.**

7.1 சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரால் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அரசாங்க ஊழியர் ஒருவரல்லாத கனிட்ட ஊழியர் ஒருவருக்கு வாக்கெடுப்போடு தொடர்புடைய அனைத்துப் பணிகளுக்குமாக கீழே 8.2(இ) யில் காட்டப்பட்டுள்ள படியை வழங்க முடியும். அவ்வாறு அரசாங்க ஊழியரொருவரல்லாத ஒருவருக்கு தாபனக் கோவையில் காணப்படும் ஆகக்குறைந்த கட்டணத்திற்கிணங்க (ஒருநாளைக்கு ரூ. 350/=) கூட்டு அலவன்சையும் வழங்க முடியும். அவ்வாறு கூட்டிச் சென்ற ஊழியருக்கான கொடுப்பனவை சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் நிரந்தர அலுவலகத்தினால் மேற்கொற்கொள்ளப்பட்டு மீள்நிரப்பலுக்காக சமர்ப்பிக்க முடியும். சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரினால் எடுத்துவரப்பட்ட வாகனமொன்றை சேவையிலீடுபடுத்துவாராயின் மாத்திரமே 6.1 (III) இற்கிணங்க இக்கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும்.

7.2 உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரினால் தமது பயணத்தின்போது கனிட்ட ஊழியர் ஒருவரையோ அல்லது வேறொருவரையோ அழைத்துச் செல்ல வேண்டியதில்லை. ஆதலால் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் அழைத்துச் செல்லும் கனிட்ட ஊழியர் ஒருவருக்கு எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படக்கூடாது.

## 8. **படிகள்.**

8.1 தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்துமூல நியமனம் வழங்கப்பட்டு தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் கீழ்வரும் வரவுச் சான்றிதழ்களின் மூலம் அவற்றை நிரூபிப்பார்களாயின் அவர்களுக்கு ஒவ்வொரு பணிக்கும் பின்வரும் விதத்திலான படிகளை வழங்க முடியும்.

8.2 இலக்கம் C.E. 19 அல்லது C.E. 19/1 என்று அச்சிடப்பட்ட வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமாயின், வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்புக் கடமையில் ஈடுபட்ட அலுவலரொருவருக்கு அம்முழுப்பணிக்குமாக பின்வருமாறான படிகளை வழங்க முடியுமென்பதோடு C.E. 52 என்று அச்சிடப்பட்ட வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமாயின், வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்தில் நிறுவப்பட்ட இணைப்பு அலுவலகங்களில் பணியாற்றிய அலுவலர்களுக்கும் முழுப்பணிக்குமாக அந்தப் படியை வழங்க முடியும்.

| | | | |
|---|---|---|---|
| அ. | சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் | - | ரூபா. 2500.00 |
| ஆ. | கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்/ எழுதுநர் | - | ரூபா. 1400.00 |
| இ. | கனிட்ட ஊழியர் | - | ரூபா. 1000.00 |

8.3 முறையான நியமனமொன்றைப் பெற்று வாக்கெடுப்போடு தொடர்புடைய வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வலயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு, C.E./46 என்ற இலக்கம் அச்சிட்டப்பட்ட வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமாயின் வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய நாள், வாக்கெடுப்புத் தினம் ஆகிய இரண்டு நாட்களுக்குமாக ஒருங்கிணைக்கப்பட்ட படியாக 2,750.00 ரூபா வழங்கப்படும். C.E. 52 என்று அச்சிடப்பட்ட வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமாயின், பிரதேச செயலக வாரியாக அமைக்கப்பட்ட இணைப்பு அலுவலகங்களில் கடமையாற்றிய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் இப்படியை வழங்க முடியும்.

8.4 வாக்குப் பெட்டிகளை விநியோகித்தமையை C.E. 47 ஆம் இலக்கம் அச்சிடப்பட்ட மாதிரிப் படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிப்பார்களாயின்,

வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னைய நாள் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள் முதலியன விநியோகிக்கும் கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கும் வாக்குப் பெட்டிகளை கையேற்றமைக்காக C.E. 48 ஆம் இலக்கம் அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிப்பார்களாயின், வாக்கெடுப்புத் தினத்தன்று மாலை வாக்குப் பெட்டிகளைக் கையேற்ற அலுவலர்களுக்கும் அந்த ஒவ்வொரு நாள் பணிக்குமாக கீழ்வருமாறு படிகளை வழங்க மடியும்.

| | | |
|---|---|---|
| உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | - | ரூபா. 600.00 |
| சிரேட்ட/ கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்/ எழுதுநர் | - | ரூபா. 500.00 |
| கனிட்ட ஊழியர் | - | ரூபா. 400.00 |

அதேபோன்று C.E. 47 அல்லது C.E. 48 ஆகிய அச்சிடப்பட்ட வரவுச் சான்றிதழ்கள் தவிர்ந்த வேறு படிவங்களிலான சான்றிதழ்களை சமர்ப்பிக்கின்ற அலுவலர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படக்கூடாது.

8.5 ஓர் அலுவலருக்கு மேற்குறித்த 8.2, 8.3 மற்றும் 8.4 ஆகிய கொடுப்பனவுகளில் ஒரு கொடுப்பனவை மாத்திரமே வழங்க முடியும். ஆயினும் அலுவலர் பற்றாக்குறை காரணமாக ஓர் விசேட சந்தர்ப்பத்தில் வலயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவராக கடமையாற்றிய ஒருவருக்கு தலைமை வாக்கெண்ணும் அலுவலரொருவராக நியமனக் கடிதமொன்று வழங்கப்பட்டிருந்தால் அவருக்கு அந்த கொடுப்பனவை வழங்க முடியும்.

8.6 வாக்கெண்ணல், பெறுபேறுகளை வெளியிடல் ஆகிய பணிகளில் மாத்திரம் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களுக்கு மேற்குறித்த 8.2 அல்லது 8.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் வழங்கப்படக்கூடாது.

8.7 தெரிவத்தாட்சி அலுவலரினால் முறையான நியமனமொன்று (பீ 8 படிவத்தில்) வழங்கப்பட்டு வாக்கெண்ணல் நிலையமொன்றில் பிரதான வாக்கெண்ணல் அலுவலராகக் கடமையாற்றிய ஒருவர் அவ்வாறு கடமையாற்றியமையை C.E. 50 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிப்பாராயின் அப்பணிக்காக 5000.00 ரூபாவை படியாக வழங்க முடியும்.

8.8 C.E. 49 ஆம் இலக்கம் அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமாயின் வாக்கெண்ணல், தேர்தல் முடிவுகளை வெளியிடல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஏனைய அலுவலர்களுக்கு அப்பணிகளுக்காக பின்வரும் படிகளை வழங்க முடியும்.

| | | |
|---|---|---|
| உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | - | ரூபா. 2750.00 |
| சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் | - | ரூபா. 1900.00 |
| கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்/ எழுதுநர் | - | ரூபா. 1700.00 |
| கனிட்ட ஊழியர் | - | ரூபா. 1000.00 |

8.9 C.E. 53 ஆம் இலக்க அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமாயின் மாத்திரம் போக்குவரத்து, நலனபுரி, பொது வசதிகள் போன்ற குழுக்கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு அவர்கள் நியமனஞ் செய்யப்பட்டிருந்த பதவிகளுக்கிணங்க 8.4 மற்றும் 8.8 ஆம் பந்திகளில் காணப்படும் கொடுப்பனவுகளை அவர்கள் கடமையாற்றிய தேர்தல்கள் அலுவலகங்களினால் மேற்கொள்வதற்கான விசேஷ அறிவுறுத்துரைகள் பிரதி/ சிரேட்ட உதவி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்கொடுப்பனவுகளை அவர்களின் நிரந்தர அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடாது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்காக மீள் நிரப்பல் மேற்கொள்ளப்படமாட்டாது.

8.10 தலைமை வாக்கெண்ணல் அலுவலருக்கு உதவியாளரொருவரை அழைத்துச் செல்ல என்னால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் தலைமை வாக்கெண்ணல் அலுவலர் அவ்வாறான ஒருவரை அழைத்துச் சென்றிருந்தால் நியமனக் கடிதம், வரவுச் சான்றிதழ் என்பவற்றின் மூலம் அதை நிரூபிப்பார்களாயின் வாக்கெண்ணல் நிலையத்தில் ஆற்றப்பட்ட கடமைக்கிணங்க அவருக்கு வாக்கெண்ணல் படியை செலுத்த முடியும்.

8.11 ஓர் அலுவலருக்கு 8.7 அல்லது 8.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளில் ஒன்றை மாத்திரமே வழங்க முடியும்.

8.12 மேற்குறித்த கொடுப்பனவுகளை, மேலே காணப்படும் உபபிரிவுகளில் குறிப்பிட்டுள்ள அச்சிடப்பட்ட படிவங்களிலான வரவுச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கின்ற அலுவலர்களுக்கு மாத்திரமே வழங்கலாம். உரிய சேவைகளை மேற்கொண்டமைக்காக வேறு படிவங்களில் வரவுச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கின்ற அலுவலர்களுக்கான படிகளுக்குரிய வவுச்சர்களை அச்சேவை மேற்கொள்ளப்பட்ட மாவட்டத்தின் பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென குறிப்பிட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

8.13 மேற்குறித்த 8.2, 8.3, 8.4, 8.7, 8.8 மற்றும் 8.9 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள படிகளைப் பெற்றுக்கொள்ளும் அலுவலர்களுக்கு அக்காலப்பகுதிக்கான விடுமுறை நாள் வேதனமோ அல்லது மேலதிக நேரப் படியோ வழங்கப்படக் கூடாது.

8.14 சாரதிகள் தவிர்ந்த ஏனைய அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு தமது நிரந்தர அலுவலகங்களினூடாக வழங்கப்படும் விடுமுறை நாள் வேதனங்கள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் என்பன மீள் நிரப்புச் செய்யப்பட மாட்டாது.

## 09. வாகனங்களின் சாரதிகளுக்கான கொடுப்பனவுகள்.

9.1 தேர்தல்கள் ஆணையாளரின் அல்லது தெரிவத்தாட்சி அலுவலர்களின் கோரிக்கைக்கிணங்க ஏப்பிரல் மாதம் 04 ஆந் திகதி முதல் ஏப்பிரல் மாதம் 10 ஆந் திகதி வரையிலான (அவ்விரண்டு தினங்களும் உள்ளிட்ட வகையில்) காலப்பகுதிக்கு மாத்திரம் வாக்கெடுப்போடு தொடர்புடைய கடமைகளில் ஈடுபட்ட வாகன சாரதிகளுக்கான (CE. 51 இலக்கம் அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமாயின் மாத்திரம்) மேலதிக நேரப்படிகளையும், கூட்டு அலவன்சுகளையும் தத்தம் நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதோடு, தேர்தல்கள் ஆணையாளரினால் அந்நிதி மீள்நிரப்புச் செய்யப்படும். ஆயினும் 9.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சாரதிகளுக்கான படிகளை அவர்களது நிரந்தர அலுவலகங்களூடாக வழங்கக் கூடாது.

9.2 9.1 ஆம் பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் தேர்தல் கடமைகள் தொடர்பான கீழே காணப்படும் கடமைகளில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களில் கடமையிலீடுபட்ட சாரதிகளுக்கான கொடுப்பனவுகள் அவர்களின் நிரந்தர அலுவலகங்களூடாக வழங்கக்கூடாதென்பதோடு, சாரதிகளுக்கான கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்களை அச் சாரதிகள் பணிபுரிந்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

i <u>ஏப்பிரல் மாதம் 04 ஆந் திகதி முதல் ஏப்பிரல் மாதம் 10 ஆந் திகதி வரையிலான</u> காலக்கெடுவுக்கு அப்பாற்பட்ட திகதிகளில் தேர்தல் கடமைகளோடு தொடர்புடைய பணிகளில் ஈடுபட்டுள்ள சாரதிகள், அவர்கள் பணிபுரிந்த முழுக் காலத்துக்குமான வவுச்சர்களை அவர்கள் கடமையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர்கள் அல்லது பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ii <u>வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட மாவட்ட செயலகங்களின் சாரதிகளுக்கும் அவ்வலுவலகங்களிலிருந்து வேதனம் பெறுகின்ற வேறு அலுவலகங்களின் சாரதிகளுக்குமான</u> தேர்தல் கடமைகளுக்கான கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்களை பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

iii <u>வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட பிரதேச செயலகங்களின் சாரதிகளுக்கும் அவ்வலுவலகங்களிலிருந்து வேதனம் பெறுகின்ற வேறு அலுவலகங்களின் சாரதிகளுக்குமான</u> தேர்தல் கடமைகளுக்கான கொடுப்பனவு வவுச்சர்களை பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9.2 ஆம் பந்திக்குரிய சாரதிகளுக்கு தமது நிறுவனங்களினால் கொடுப்பனவுகளை மேற்கொண்டுவிட்டு அக்கொடுப்பனவுகளை மீள் நிரப்பக் கோருகின்ற கோரிக்கைகளை தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கக் கூடாதென்பதோடு, அத்தகைய கொடுப்பனவுகள் மீள்நிரப்புச் செய்யப்பட மாட்டாதென்பதையும் கருத்தில் கொள்ளவும்.

9.3 தேர்தல் தினங்களுக்குரிய பாதுகாப்புத் தேவைகருதி பொலீஸ் நிலையங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்ட சாரதிகளுக்கான பயணச் செலவுகளும், மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் பொலீஸ் திணைக்களத்தினால் வழங்கப்பட வேணடுமென்பதோடு, அக்கொடுப்பனவினை மீள்நிரப்புச் செய்யக் கோரி தேர்தல்கள் அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்கக் கூடாது.

9.4 சாரதிகளுக்குக் கொடுப்பனவுகள் செய்யப்படும்போது தாபனக் கோவையின் விதிமுறைகள், கட்டணத் தொகைகள் என்பவற்றிற்கு அமையவே வழங்கப்படல் வேண்டும்.

## 10 பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொண்டமைக்கான செலவினங்கள்.

10.1 அலுவலர்களுக்கு செலவுகளின்றி கலந்துகொள்ளத் தக்கதாகப் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்குரிய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்வதற்காக ஏற்பட்ட பிரயாணச் செலவை எதிர்பார்க்கின்ற அலுவலர்கள், அவற்றிற்கான தமது பிரயாணச் செலவிற்கான வவுச்சர்களை அந்த வகுப்பில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

10.2 பயிற்சி வகுப்புகளுக்குச் செல்வதற்காக வாடகை வாகனக் கட்டணம் அல்லது இரவல் வாகனங்களுக்கான மைல்கட்டணம் என்பன வழங்கப்பட மாட்டா.

10.3 பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொண்ட அலுவலர்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்காக நிதி ஒதுக்கித் தருமாறு நிறுவனத் தலைவர்கள் கோரிக்கை விடுக்கக் கூடாது. அதேபோன்று இவ்விடயத்துக்கு தமது நிறுவனத்தினால் கொடுப்பனவு செய்துவிட்டு, அந்நிதியை மீள்நிரப்புச் செய்து தருமாறு தேர்தல்கள் ஆணையாளரிடமோ பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடமோ கோரிக்கை விடுக்கக் கூடாது.

10.4 பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொண்டமைக்காக விடுமுறை தின வேதனம் அல்லது மேலதிக நேரக் கொடுப்பனவு என்பன வழங்கப்படமாட்டா.

## 11. கொடுப்பனவுகளை மீள் நிரப்புச் செய்தல்.

11.1 வாக்கெடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்குரிய படிகளை இச்சுற்றறிக்கைக்கமைய தமது நிரந்தர அலுவலகங்களினால் பெற்றுக்கொள்ள முடியும். அத்தகைய கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்களை இச்சுற்றறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ள "A" படிவத்துக்கமைவான கொடுப்பனவு அட்டவணையோடு கூடிய சான்றிதழொன்றை அனுப்பி வைப்பதன் மூலம் தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து அந்நிதியை மீள்நிரப்புச் செய்துகொள்ள முடியும். (அரச நிறுவனங்களின் சாரதிகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பிரயாணச் செலவினங்கள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் என்பவற்றை இப்படிவத்தில் உட்சேர்க்கக் கூடாதென்பதனை தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும்.)

11.2 மேலேயுள்ள 9.1 பந்திக்கமைய சாரதிகளுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற பிரயாணச் செலவுகள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் தொடர்பாக இத்தோடு இணைக்கப்பட்டுள்ள "B" படிவத்துக்கமைய நிரப்பப்பட்ட அட்டவணையொன்றை அனுப்பிவைப்பதன் மூலம் அந்நிதியை மீள்நிரப்புச் செய்துகொள்ள முடியும்.

11.3 மேற்குறித்த ஆவணங்களோடு உரிய கொடுப்பனவுகள் தொடர்பான வவுச்சர்களை எனக்கு அனுப்பிவைக்கக் கூடாது. அந்த வவுச்சர்களை ஏனைய வவுச்சர்களோடு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படுவதற்காக வைத்திருத்தல் வேண்டும்.

11.4 கொடுப்பனவு அட்டவணைகளின் தெளிவான மூலப்பிரதி மாத்திரம் இவ்வலுவல-கத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு, தொலை நகல் மூலம் அனுப்பிவைக்கப்படுகின்ற அட்டவணைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

11.5 மாதிரிப் படிவத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் தகவல்கள் முழுமையானவையாகவும், பிழையற்றவையாகவும் இருத்தல் வேண்டும். அதேபோன்று அலுவலர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படுகின்ற பல்வேறு படிகள் வெவ்வேறாக பிழையின்றி உரிய நிரல்களில் உட்சேர்க்கப்படல் வேண்டும். குறைபாடுடைய அல்லது பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் விசாரிக்கவும் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டியுள்ளதால் அத்தகைய நிதி மீள்நிரப்புக்கள் காலதாமதமடைய இடமுண்டு என்பதை தயவுசெய்து கவனத்திலெடுக்கவும்.

11.6 அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள் என்பவற்றின் அலுவலர்களுக்கு அவ்வலுவலகங்களின் கட்டு நிதி மூலமும், கூட்டுத்தாபனங்கள், உள்ளூர் அதிகார சபை நிறுவனங்கள் போன்ற அலுவலகங்களின் அலுவலர்களுக்கு அந்நிறுவனங்களின் நிதியங்கள் மூலமும் இக்கொடுப்பனவுகளை வழங்க முடியும்.

11.7 கொடுப்பனவு செய்யப் போதியளவு கட்டு நிதியோ, நிதியமோ இல்லாத நிறுவனங்களின் (விசேடமாக வலய கல்வி அலுவலகங்கள்) அலுவலர்களின் வவுச்சர்களை உரிய விதத்தில் சரிபிழை பார்த்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய சரியான நிதி தொடர்பான விபரங்களை மேற்குறித்த மாதிரிப் படிவத்துக்கமைய அறிவித்ததன் பின்னர், பரிசீலனை செய்து அந்நிதி விடுவிக்கப்படும்.

## 12. கொடுப்பனவுகள் தொடர்பான அட்டவணைகளைத் தயாரித்தல்.

12.1 தலைமை வாக்கெண்ணல் அலுவலர், வலயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர், வாக்குப் பெட்டிகளின் விநியோகம், கையேற்பு, வாக்கெண்ணல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள், கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள், எழுதுநர்கள், கனிட்ட ஊழியர்கள் என்ற வகையில் பணிபுரிந்த பணியாட் குழுவினருக்கான கொடுப்பனவுகள் "A" படிவத்தில் பிழையின்றி உட்சேர்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

12.2 அலுவலர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற பிரயாணச் செலவுகள், மைல் கட்டணங்கள், கூட்டு அலவன்சுகள் என்பன "A" படிவத்தின் 5 ஆம் நிரலிலும், மேலே 6.1 (III) ஆம் பிரிவின் கீழ் தனியார் சாரதிகளுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற பிரயாணச் செலவுகள், கூட்டு அலவன்சுகள் என்பன “B” படிவத்தின் 6 ஆம் நிரலிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

12.3 சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் ஒருவர் தமது வாக்கெடுப்பு நிலையத்தின் அலுவல்களுக்காக கனிட்ட ஊழியர் ஒருவராக அரசாங்க ஊழியரல்லாத ஒருவரை பணிக்கமர்த்தி, அவ்வூழியருக்காக வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் பெயரில் பெற்றுக்கொண்டுமிருந்தால் அவ்வூழியருக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட பிரயாணச் செலவுகள், கூட்டு அலவன்சுகள் என்பன மேற்குறித்த சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் பெயருக்கெதிரே "A" படிவத்தின் 5 ஆம் நிரலில் காட்டப்படல் வேண்டும். வாக்கெடுப்பு நிலையக் கொடுப்பனவுகள் மாத்திரம் 9 ஆம் நிரலில் காட்டப்படல் வேண்டும்.

12.4 அரசாங்க ஊழியர் அல்லாத கனிட்ட ஊழியர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பிரயாணச் செலவுகள், அலவன்சுகள் அவ்வூழியர் பெயரிலான வவுச்சர்களின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பின், உரிய அட்டவணையில் அவரின் பெயரைக் குறித்து, அதற்கு நேரெதிரே (படிவம் "A") 2 ஆம் நிரலில் "அரச சேவையல்லாத ஊழியர்" எனக் குறிப்பிட்டு அவருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட பிரயாணச் செலவுகள், கூட்டு அலவன்சுகளை 5 ஆம் நிரலிலும், வாக்கெடுப்பு நிலையக் கொடுப்பனவை 9 ஆம் நிரலிலும் காட்டப்படுதல் வேண்டும்.

12.5 தேர்தல் கடமைகளுக்காக பணிக்கமர்த்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களின் சாரதிகளின் கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்களை இங்குள்ள "B" படிவத்தில் வேறாக குறிப்பிடல் வேண்டும்.

12.6 தமது தினசரிக் கடமைக்காக வாகனமொன்று குறித்தொதுக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர், தேர்தல் கடமைக்காக அவ்வாகனத்தை எடுத்து வந்துள்ள சந்தர்ப்பங்களில், அவ்வாகனத்தை செலுத்திய அரசசேவை சாரதிக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளையும் இந்த "B" படிவத்தில் பதிய வேண்டும் என்பதோடு, அச் சாரதியின் பெயருக்கு நேரெதிரே 4 ஆம் நிரலில் அவ்வாகனத்தை கடமைக்காக எடுத்துச் சென்ற பதவிநிலை அலுவலரின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். (தெரிவத்தாட்சி அலுவலரின் வாகன குழாத்துக்காக வருகைதந்த வாகனமொன்று தொடர்பாயின் தயவுசெய்து 4 ஆம் நிரலை வெற்றாக வைக்கவும்.)

## 13. கொடுப்பனவுகளை துரிதப்படுத்துவதற்காக அலுவலர்களுக்கு வழங்கப்படும் படிகள்.

13.1 அனைத்து அலுவலர்களினதும் பிரயாணச் செலவுகள், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள், படிகள் என்பவற்றின் கொடுப்பனவுகள் வாக்கெடுப்புத் தினத்திலிருந்து 90 நாட்களுக்குள் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

13.2 வாக்கெடுப்பு அலுவல்களுக்காக பெருந்தொகையான அலுவலர்களை ஈடுபடுத்த வேண்டியிருந்த அலுவலகங்களின் அலுவலர்களுக்கு தமது கொடுப்பனவுகளை துரிதமாகப் பெற்றுக்கொள்வதை இயலச் செய்வதற்காக வவுச்சர்களைப் பரிசீலித்தல், சான்றுறுதிப்படுத்தல், அட்டவணைப்படுத்தல், காசோலை எழுதுதல், கொடுப்பனவு, கணக்குகளை வைத்திருத்தல் ஆகிய அனைத்து அலுவல்களிலும் ஈடுபடுகின்ற அலுவலர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செய்யத்தக்கவாறு நிதி வழங்கப்படும்.

13.3 இந்த சுற்றறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்புப் படிவத்துக்கிணங்க தயார் செய்யப்பட்ட தேர்தல் பணியாட்களுக்கான கொடுப்பனவு அட்டவணைகளை பிழையின்றியும் துரிதமாகவும் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பிப்பதற்கேற்ப 13.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் சார்பாக ஊக்குவிப்புக் கொடுப்பனவு செய்வதை இயலச் செய்யும் விதத்தில் மீள் நிரப்பல் செய்யப்படும்போது தங்களுக்கு மேலதிக நிதி ஒதுக்கிக்கொடுக்கப்படும்.

13.4 எது எவ்வாறெனினும் வாக்கெடுப்புத் தினத்திலிருந்து 90 நாட்களுக்குப் பின்னர் தேர்தல்கள் ஆணையாளருக்கு கிடைக்கப் பெறுகின்ற அட்டவணைகளுக்கும், இந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் அட்டவணைகளுக்கும், தயார்படுத்தல் குறைபாடுகள், தட்டச்சிடல் குறைபாடுகள், கூட்டல் தவறுகள் என்பவற்றுடன் கூடியதாக சமர்ப்பிக்கப்படும் அட்டவணைகளுக்கும், 15 அலுவலர்களுக்குக் குறைவான தொகையினரை உள்ளடக்கிய அட்டவணைகளுக்கும் மேற்குறித்த மேலதிக நிதி வழங்கப்பட மாட்டாது.

13.5 கொடுப்பனவு அட்டவணைகளை இவ்வலுவலகத்துக்கு அனுப்பி வைக்க முன்னர், தகவல்கள் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவா என சரிபார்த்துக் கொள்ளுமாறும், கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிதியளவு தொடர்பான விபரங்களை தட்டச்சிட்டதன் பின்னர் மீண்டும் கூட்டிப் பார்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுவதோடு, **அப்படிவங்கள் பல பக்கங்களைக் கொண்டுள்ளபோது பக்கத்தின் இறுதியில் மொத்தத் தொகையையும் அப்பக்கங்களின் மொத்தத் தொகையை இறுதிப் பக்கத்தின் கடைசியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.** அதேபோல் மாதிரிப் படிவத்திலுள்ளவாறு **அலுவலர்களின் தொகையை அறிந்துகொள்வதற்காக அலுவலர்களின் பெயருக்கெதிரே தொடர் இலக்கங்களையும்** இடல் வேண்டும். நிதி மீளளிப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருகின்ற குறிப்பீடு, தட்டச்சிடல் தவறுகள் தொடர்பாக எனக்கு அறிவிக்கத் தேவையில்லை எனத் தெரிவிப்பதோடு, குறைவாகவுள்ள நிதியை மேற்குறித்த கொடுப்பனவுப் பணியாட்களுக்கு வழங்கப்படும் மேலதிக பணத்திலிருந்து ஈடு செய்துகொள்ளவும் வேண்டும்.

## 14. ஏனைய விடயங்கள்.

14.1 மேற்குறித்த 03 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கும், 9.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சாரதிகளுக்கும் தங்களது அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டு நிதி மீள்நிரப்புக்காக என்னிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணைகளையும், 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் 9.2 ஆம் பந்தியின் கீழான

சாரதிகள் தொடர்பாக நேரடியாக தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய வவுச்சர்களையும் மிகத் துரிதமாக சமர்ப்பிக்குமாறு தங்களது அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல் வேண்டும்.

14.2 வாக்கெடுப்போடு தொடர்புடைய அனைத்து கொடுப்பனவுகளையும் குறிப்பிடப்பட்ட காலக்கெடுவுக்குள் நிறைவு செய்ய வேண்டியிருக்கின்றது. பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் வாக்கெடுப்பு முடிவடைந்து 90 நாடகளுக்குள் அல்லது அவ்வலுவலர்களால் அறிவிக்கப்படுகின்றவாறு அதற்கு முன்னர் முடிவுறுத்தப்படும். ஆதலால் 04, 9.2 ஆம் பந்திகளுக்கு அமைய கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள வேண்டிய அலுவலர்கள் குறித்த தினத்திற்கு முன்னர் வவுச்சர்களை சமர்ப்பிக்காவிடின் அவர்களுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போய்விடக்கூடும்.

14.3 தங்களது அலுவலகத்தினூடாக கொடுப்பனவு செய்துவிட்டு, மீள்நிரப்புக்காக முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளை மிக விரைவில் எனக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மீள்நிரப்புக்கான அக்கோரிக்கைகள் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது பிரதித்/ சிரேட்ட உதவித்/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பப்படக் கூடாது.

14.4 நிதி மீள்நிரப்புக்காக முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளை சமர்ப்பித்து 30 நாட்களுக்குள் பதில் கிடைக்காவிடின், அக்கடிதம் காணாமல் போயுள்ளதாகக் கருதப்பட வேண்டியதோடு, அது தொடர்பாக பதிவுத் தபால் மூலம் எனக்கு அறிவித்தல் வேண்டும்.

14.5 எரிபொருள் செலவு மீள்நிரப்பல் செய்யப்படும் பணிகள் இத்திணைக்களத்தின் போக்குவரத்துக் கிளையினால் மேற்கொள்ளப்படுமாதலால் அதுதொடர்பான பிரச்சினைகள் எழுமாயின் போக்குவரத்துப் பிரிவில் விசாரிப்பதன் மூலம் சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

14.6 இந்த தேர்தலுக்கான கொடுப்பனவுகள் 2010.07.15 ஆந் திகதி நிறைவு செய்யப்படவிருப்பதால், அத்தினத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள் போன்றே விசாரிப்புக்களும் நிராகரிக்கப்படுமென்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

14.7 மேற்கூறப்பட்ட தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்து மீள்நிரப்புச் செய்துகொள்ளப்படாத செலவினங்கள் தொடர்பாக முழுப் பொறுப்பும் கொடுப்பனவு செய்த அலுவலருக்கு சுமத்தப்படுமென்றும், அக்கொடுப்பனவுகள் தொடர்பாக தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுக்காது என்பதையும் தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்,

"A" படிவம்

எனது இல. :-
உமது இல. :- எவ்ஈ/211/2010
திகதி :-

தேர்தல்கள் ஆணையாளர்,

## பாராளுமன்றத் தேர்தல் 08.04.2010
## தேர்தல் பணியாட்களுக்கான கொடுப்பனவுகள்

2010.04.08 ஆந் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட இந்நிறுவனத்தின் அலுவலர்களுக்கு தங்களது 2010.04.09 ஆந் திகதிய சமஇலக்க சுற்றறிக்கைக்கிணங்க ரூபா. ..................................................................................................... ம் ................................................ சதமும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலுவலருக்கும் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

02. இப்பணத்தை மீள்நிரப்புச் செய்வதற்காக ........................................................................................................................................................ எனும் பெயருக்கு காசோலையொன்றை அனுப்பிவைக்கவும்.

நிறுவனத்தின் பெயர் :-

நிறுவனத்தின் முகவரி :-

தொலைபேசி இல. :-

.................................................................
(நிறுவனத் தலைவர்)
பதவிப் பெயர் .........................................

| தொடர் இல. | (01) அலுவலரின் பெயர் | (02) நிரந்தரப் பதவி | (03) வாக்கெடுப்புக் கடமையில் ஈடுபட்ட மாவட்டம் | (04) பணிபுரிந்த பதவி பி..வா.அ./ உ.தெ.அ./ சி.த.தா.அ./ க.த.தா.அ./ எழுதுநர்/ கனிட்ட ஊழியர் | (05) பிரயாணச் செலவுகளும் கூட்டு அலவன்சுகளும் (முழுப் பணிக்குமாக) | படிகள் | | | (09) அரச ஊழியரல்லாத கனிட்ட ஊழியரின் கொடுப்பனவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | (06) வாக்கெடுப்பு நிலைய பணிகள் | (07) வாக்-கெண்ணல் | (08) விநியோகித்தலும் கையேற்றலும் | |
| 1. | | | | | | | | | |
| 2. | | | | | | | | | |
| 3. | | | | | | | | | |
| 4. | | | | | | | | | |
| 5. | | | | | | | | | |
| 6. | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | |

தயாரித்தவர் :-
கையொப்பம் :
பெயர் :
பதவி :

பரீட்சித்தவர் :-
கையொப்பம் :
பெயர் :
பதவி :

"B" படிவம்

எனது இல. :-
உமது இல. :- எவ்ஈ/211/2010
திகதி :-

தேர்தல்கள் ஆணையாளர்,

## பாராளுமன்றத் தேர்தல் 08.04.2010

## தேர்தல் பணியாட்களுக்கான கொடுப்பனவுகள்

2010.04.08 ஆந் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட இந்நிறுவனத்தின் சாரதிகளுக்கு தங்களது 2010.04.09 ஆந் திகதிய சமஇலக்க சுற்றறிக்கைக்கிணங்க ரூபா. .................................................................................... ம் ........................................................ சதமும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சாரதிக்கும் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

02. இப்பணத்தை மீள்நிரப்புச் செய்வதற்காக ........................................................................................................................................ எனும் பெயருக்கு காசோலையொன்றை அனுப்பிவைக்கவும்.

நிறுவனத்தின் பெயர் :-

நிறுவனத்தின் முகவரி :-

தொலைபேசி இல. :-

..................................................................
(நிறுவனத் தலைவர்)
பதவிப் பெயர் .........................................

| தொடர் இல. | (01) சாரதியின் பெயர் | (02) வாகனத்தின் இல. | (03) வாகனம் குறித்தொதுக்-கப்பட்டதொன்றா/ குழாத்தின் வாகனமொன்றா என்பது | (04) அலுவலரொருவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனமொன்றாயின் அவ்அலுவலரின் பெயர் | (05) வாக்கெடுப்புக் கடமையில் ஈடுபட்ட மாவட்டம் | (06) பிரயாணச் செலவுகள், கூட்டு அலவன்சுகள் (முழுப் பணிக்குமாக) ரூபா. சதம் | (07) மேலதிக நேரக் கொடுப்பனவுகளும், விடுமுறை தின வேதனங்களும் ரூபா. சதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | | |
| 2. | | | | | | | |
| 3. | | | | | | | |
| 4. | | | | | | | |
| 5. | | | | | | | |
| 6. | | | | | | | |
| | மொத்தம் | | | | | | |

தயாரித்தவர் :-
கையொப்பம் :
பெயர் :
பதவி :

பரீட்சித்தவர் :-
கையொப்பம் :
பெயர் :
பதவி :